**தலைப்பு 233 - அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 233 - அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 29 ஆம் திகதி அரசாங்க பகுப்பாய்வாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 515.30 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 372.68 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 142.62 மில்லியன் அதாவது 27.68 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 224.80 | 210.06 | 14.74 | 6.56 |
| மூலதனம் | 290.50 | 162.62 | 127.98 | 44.02 |
| மொத்தம் | 515.30 | 372.68 | 142.62 | **27.68** |

### 2.2 முற்பணக் கணக்கு

#### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 7.37 | 5.54 | 4.37 | 5.99 | 30.00 | 19.08 |

### 2.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 02 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுமொத்தமான மீதி ரூபா 2.15 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0016/0003/000 | 1.59 |
| 6000/0000/00/0018/0004/000 | 0.56 |
| மொத்தம் | **2.15** |

### 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தால் கிழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | |

### 3.2 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

#### உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் உரிய உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 இணங்காமைகள்

#### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| (அ) நிதிப்பிரமாணம் 104(1) | திணைக்களத்தின் 06 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 756 | களஞ்சியத்தில் காணப்பட்ட நுகர்வுத் தன்மையான பொருட்கள் வருடாந்த பொருள் மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | நிதிப்பிரமாணம் 760 | 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வுச் சபையின் அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட 08 பொருள் விடயங்களின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.4 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

### காலதாமதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

டிஜிடல் பல் ஊடக குற்றப்புலனாய்வு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக KOICA வெளிநாட்டுதவியாக ரூபா 90 மில்லியன் கிடைத்திருந்தது. எனினும் செயற்திட்டம் 2015 யூன் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது 06 மாத தாமதத்தின் பின்னர் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

## 3.5 செயலாற்றல்

### மாதிரிப் பரிசோதனையிட்டு அறிக்கை சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது திணைக்களத்திற்கு பரிசோதனையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பதற்காக 4,291 மாதிரிகள் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது மேலும் 26,443 மாதிரிகள் கிடைக்கப் பெற்றிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்தால் 30,734 மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் 26,779 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் பரீட்சிக்கப்படாத மாதிரிகளின் எண்ணிக்கை 3,955 ஆக இருந்தது. பரிசோதனை செய்யப்படாத மாதிரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அந்த மாதிரிகளில் 271 அல்லது 7 சதவீதமான அளவு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பரிசோதனை செய்யப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்தது. அவ்வாறு பரிசோதனை செய்யப்படாது முன்கொண்டுவரப்பட்ட மாதிரிகளின் காலப்பகுப்பாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பரிசோதனை செய்யப்படாது கையிலிருந்த மாதிரிகளின் காலம் | மாதிரிகளின் எண்ணிக்கை | கையிலுள்ள மாதிரிகளின் எண்ணிக்கை சதவீதமாக |
|---|---|---|
| 01 வருடத்திற்குக் குறைவு | 1,529 | 39 |
| 01 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்குக் குறைவு | 1,136 | 28 |
| 03 வருடங்களுக்கு மேல் 05 வருடங்களுக்குக் குறைவு | 389 | 10 |
| 05 வருடங்களுக்கு மேல் 10 வருடங்களுக்குக் குறைவு | 629 | 16 |
| 10 வருடங்களுக்கு மேல் | 272 | 07 |
| மொத்தம் | 3,955 | 100 |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 90 | 74 | 16 |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 02 | 08 |
| (iii) | இரண்டாம் நிலை | 119 | 86 | 33 |
| (iv) | ஆரம்ப நிலை | 78 | 67 | 11 |
| | மொத்தம் | 297 | 229 | 68 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தில் காணப்படுகின்ற 68 வெற்றிடங்களில் 06 வெற்றிடங்களுக்காக பதில் கடமை அடிப்படையில் உத்தியோகர்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின்போது ரூபா 665,485 படி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தின் ஒட்டுமொத்த பதவியணியினரில் மரபணு விஞ்ஞான பிரிவிற்காக 22 உத்தியோகத்தர்களும், போதைப் பொருள் பிரிவிற்காக 29 உத்தியோகத்தர்களும் - நச்சுவியல் பிரிவிற்காக 29 உத்தியோகத்தர்களுமாக 80 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பிரிவுகளுக்குக் கிடைத்த மாதிரிகளைப் பரீட்சித்து அறிக்கை வழங்கும் செயல்முன்னேற்றம் 78 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.